செய்தி வெளியீடு நாள் :17.11.2023

**சென்னை பெருநகர வளர்ச்சி குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை மற்றும் பிற இணையவழி சேவைகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*******

இன்று (17.11.2023) சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் சென்னை பெருநகர வளர்ச்சி குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை, இணையவழி திட்ட அனுமதி பயிற்சி காணொலி (PreDCR Tutorial Videos), 12 துறைகளின் ஒருங்கிணைந்த தடையில்லா சான்றிதழ் மற்றும் வீடு/மனை வாங்குவோருக்கான விழிப்புணர்வு சித்திர கதைகள் குறித்த கையேடுகள் ஆகியவற்றை வெளியீட்டு தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை, இணைய வழி திட்ட அனுமதி பயிற்சி காணொலி, 12 துறைகளின் ஒருங்கிணைந்த தடையில்லா சான்றிதழ் வழங்கும் சேவைகள் இன்று (17.11.2023) தொடங்கி வைக்கப்பட்டு, வீடு மற்றும் மனை வாங்குவோருக்கான விழிப்புணர்வு சித்திர கதைகள் குறித்த கையேடுகள் வெளியிடப்பட்டது. மேலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் (Layout Approval Application) இன்று முதல் முழுமையாக இணையவழி (Online) மூலம் பெறப்பெற்று, பரிசீலிக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படும்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒற்றை சாளர முறை அடிப்படையில் இணைய வழி (Single Window Clearance system) திட்ட அனுமதி மென்பொருளை உருவாக்கி, மே மாதம் 2022ஆம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும ஆன்லைன் போர்ட்டல் மூலம் பெறப்பட்ட 1,179 விண்ணப்பங்களில், 820 விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல், திட்ட அனுமதி வழங்கும் வரை, முற்றிலுமாக இணைய வழியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பதிவு செய்யப்பட்ட கட்டிட வல்லுநர்கள், கட்டிடப் பொறியாளர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள் ஆகியோர்களுக்கு இணையதள திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிப்பது, கையாளுவது சம்பந்தமாக மேம்படுத்தப்பட்ட மென்பொருள்

மூலம் பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு, இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட பல்வேறு நேர்முக பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

PreDCR கூர்ந்தாய்வு மென்பொருள் மூலம் திட்ட அனுமதி வரைபடம் உருவாக்குவதற்கான படிப்படியான செயல்முறைகளை பயிற்சி காணொளி (Tutorial Videos) மூலம் விரிவாக விளக்கப்படுகிறது. இது தொடர்பாக, 10 பயிற்சி காணொளிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "சித்திர கதை" (Comic Strip) துவக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இரண்டு கருப்பொருள்களுக்காக "சித்திர கதை" (Comic Strip)' உருவாக்கப்பட்டுள்ளது.

- திட்ட அனுமதி எதற்காக நமக்கு தேவைப்படுகிறது?
- பிளாட் (Flat) அல்லது ப்ளாட் (Plot) வாங்கும் முன் என்னென்ன அம்சங்களைச் சரிபார்க்க வேண்டும்?

மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் (Layout Approval Application) இன்று (17.11.2023) முதல் முழுமையாக இணையவழி (Online) மூலம் பெறப்பெற்று, பரிசீலிக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படும். இணைய வழி மூலம் திட்ட அனுமதி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது முதல் ஒப்புதல் வழங்குதல் வரை முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இணைய வழி மூலம் கட்டிட அனுமதி வழங்குவதையும் செயல்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆன்லைன் போர்ட்டலை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பெருநகர சென்னை மாநகராட்சி (GCC), நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (RDPR) மற்றும் பேரூராட்சிகள் இயக்ககம் (DTP) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு தடையில்லா சான்றிதழ் வழங்கும் துறைகளான viz., CMRL, PWD, WRD, TNHB, ELCOT, Forest, Geology & Mines, SIDCO, State Highways, Southern Railway, Collectorates and DFRS ஆகியவை ஆன்லைன் போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும ஆன்லைன் போர்ட்டல் விண்ணப்பதாரர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இனி வரும் காலங்களில் அனைத்தும் இணையவழி மூலம் செயல்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி செயல்படும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர்

திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், முதுநிலை திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.